بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹு¬ல்லாஹு¬த் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *02/10/2020* அன்று இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜு¬முஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

பத்ர் சஹாபாக்களைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டு வந்தது. இன்று எடுத்துரைக்கப்பட உள்ள சஹாபி ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் ஆவார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ்வுடைய பெயர் ஆமிர் பின் அப்துல்லாஹ் என்பதாகும். அவரது தந்தையின் பெயர் அப்துல்லாஹ் பின் ஜர்ராஹ் என்பதாகும். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் தனது சுட்டுப்பெயரின் காரணமாக மிகவும் பிரசித்தி பெற்றிருந்தார். ஆனால் அன்னாரது பரம்பரை அன்னாரது பாட்டனார் ஜர்ராஹ் என்பவருடன் இணைத்து கூறப்படுகிறது. அன்னாரது தாயார் பெயர் அமீமா பின்த் ஃகனம் என்பதாகும். குறைஷ் சமுதாயத்தின் பனூ ஹாரிஸ் பின் ஃபிஹ்ர் குடும்பத்துடன் தொடர்புடையவராக அன்னார் இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் தோற்றம் பற்றி கூறப்படுகையில் அன்னார் உயரமானவராகவும், உடல் மெலிந்தவராகவும், முகத்தில் சதை குறைவானவராகவும் காணப்பட்டார்கள். முன்னால் இருந்த இரண்டு பற்கள் உஹது போரின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தில் இரும்பு முககவசம் உடைந்து இரண்டு கொக்கிகளின் ஆணிகள் அன்னாரது தாடையில் புதைந்திருந்ததை வெளியே எடுத்தபோது உடைந்தன. அன்னாரது தாடி அடர்த்தியற்றதாக இருந்தது. அன்னார் முடிகளுக்கு சாயம் உபயோகப்படுத்தி வந்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் பல திருமணங்கள் செய்திருந்தார்கள். ஆனால் அதில் இரண்டு துணைவியார்களின் மூலமாக மட்டுமே சந்ததிகள் பிறந்தன. அன்னாருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தனர். ஒருவரது பெயர் யஸீது மற்றவரது பெயர் உமைர் என்பதாகும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது வாழ்வில் சொர்க்கத்திற்கான நற்செய்தி வழங்கிய அந்த பத்து சஹாபாக்களில் ஒருவராக ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் இருந்தார்கள். அவர்களை அஷ்ரஹ் முபஷ்ஷிரஹ் என்றழைப்பர்.** ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் குறைஷிகளில் உயர்வான, நல்லொழுக்கம் மிகுந்த மற்றும் வெட்கவுணர்வு மிகுந்த மக்களில் ஒருவராக கருதப்பட்டார்கள். **ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தப்லீகின் மூலம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள்.** இது முஸ்லிம்கள் தாருல் அர்க்கத்தில் அடைக்கலம் புகுவதற்கு முன்புள்ள சம்பவம் ஆகும். **ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றவர்களில் ஒன்பதாவது நபர் ஆவார்கள்.**

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “**ஒவ்வொரு உம்மத்திற்கும் ஒரு அமீன் - நம்பிக்கைக்குரியவர் இருப்பார். எனது உம்மத்தின் நம்பிக்கைக்குரியவர் அபூ உபைதா பின் ஜர்ராஹ் ஆவார்கள்.**” ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின்

ஜர்ராஹ் அவர்களின் கையை பிடித்தார்கள். மேலும் ஹாதா அமீனுன் ஹாதிஹில் உம்மஹ் - இவர் இந்த உம்மத்தின் நம்பிக்கைக்குரியவர் ஆவார் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூபக்ர், உமர், அபூ உபைதா பின் ஜர்ராஹ், உஸைத் பின் ஹுழீர், சாபித் பின் கைஸ் பின் ஷமாஸ், முஆஸ் பின் ஜபல் மற்றும் முஆஸ் பின் அம்ர் பின் ஜமூஹ் ஆகியோர் எவ்வளவு நல்ல மனிதர்களாக உள்ளனர் எனக் கூறினார்கள். அதாவது அன்னார் அவர்களை புகழ்ந்தார்கள்.

ஒரு முறை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனக்குப் பிறகு யாரையாவது பிரதிநிதியாக நியமித்திருந்தால் யாரை நியமித்திருப்பார்கள் எனக் கேட்கப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களை எனக் கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்குப் பிறகு யாரை நியமித்திருப்பார்கள் என மக்கள் கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் ஹஸ்ரத் உமர் எனக் கூறினார்கள். அதன் பின்னர் யாரை நியமித்திருப்பார்கள் என மக்கள் கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் அபூ உபைதா பின் ஜர்ராஹ் என்றார்கள்.**

ஹஸ்ரத் ஆயிஷா அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களுக்கு எந்தளவு மதிப்பும், மரியாதையும் இருந்ததென்றால் **ஹஸ்ரத் உமர் அவர்களின் மரணத்தின் போது ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் அவர்கள் தான் கலீஃபாவாக ஆகியிருப்பார்கள் எனக் கூறி வந்தார்கள்.**

அன்னார் அபிசீனியவை நோக்கி செய்யப்பட்ட ஹிஜ்ரத்திலும் பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்த போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகம் ஜொலிக்க ஆரம்பித்தது. ஹஸ்ரத் உமர் அவர்கள் முன்னே சென்று கட்டித் தழுவினார்கள்.

**ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் பத்ர், உஹது மற்றும் ஏனைய அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.** பத்ர் போரின் சமயத்தின் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் வயது **41** ஆக இருந்தது. பத்ர் போர் நாளன்று ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் முஸ்லிம்கள் சார்பாக போர்க்களத்திற்கு வந்தார்கள். அன்னாரது தந்தை அப்துல்லாஹ் காஃபிர்கள் தரப்பிலிருந்து போர்க்களத்திற்கு வந்தார். தந்தையும், தனயனும் நேருக்குநேர் சந்தித்த போது ஏகத்துவத்தின் உணர்வு குடும்ப உணர்வின் மீது மேலோங்கியது. அப்போது அப்துல்லாஹ் தனது மகன் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் கைகளினால் கொல்லப்பட்டார்.

உஹது போரில் மக்கள் சிதறுண்ட சமயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் உறுதியாக நிலைநின்ற மக்களில் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களும் இருந்தார்கள். ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு துல்கஅதா மாதத்தில் ஹுதைபியா சமாதான உடன்படிக்கை எழுதப்பட்ட போது, அந்த ஒப்பந்தத்திற்கு இரண்டு நகல்கள் தயார் செய்யப்பட்டன. இருபுறமும் சாட்சியாளராக கண்ணியத்திற்குரிய பலர் அதில் கையொப்பமிட்டனர். முஸ்லிம்கள் சார்பாக கையொப்பமிட்டவர்களில் ஒருவராக ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களும் இருந்தார்கள்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களை பல்வேறு சரிய்யாக்களில் (படைக்குழுக்களில்) அதாவது போருக்கான பயணங்களில் அனுப்பினார்கள்.**

அவற்றில் தாத்துல் ஸலாஸில் என்ற படைக்குழுவும் ஒன்றாகும். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் மேலும் படைகளை அனுப்புங்கள் என தூது அனுப்பினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருநூறு முஹாஜிரீன்கள் மற்றும் அன்ஸார்களின் குழுவை ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் தலைமையில் உதவிக்காக அனுப்பி வைத்தார்கள். மேலும் அம்ரை சென்று சந்தியுங்கள் அவருடன் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள் என அறிவுறுத்தினார்கள். ஹஸ்ரத்

அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் தனது அந்தஸ்தின் அடிப்படையில் தலைமைக்கு தகுதியானவர்களாக இருந்தார்கள். ஆனால் அம்ர் பின் ஆஸ் அவர்கள் நான் தான் முழு படைக்கும் தலைமை வகிப்பேன் என வலியுறுத்தினார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் மகிழ்ச்சியுடன் அன்னாரது தலைமையை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களின் தலைமையின் கீழ் முழு வீரத்துடன் எதிரிகளுடன் சண்டையிட்டார்கள். எந்தளவுக்கென்றால் எதிரிகள் தோல்வியடைந்தனர். வெற்றி பெற்ற பின் மதீனா திரும்பி வந்தார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் கீழ்படிதலின் தரம் குறித்து கேள்விப்பட்டதும், அபூ உபைதாவின் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக! எனக் கூறினார்கள். அதாவது கீழ்படுதலில் இந்த தரத்தை நிலைநாட்டியதற்காக அல்லாஹ் கருணை காட்டுவானாக என்றார்கள்.**

ஹஸ்ரத் சய்யிது ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் அவர்கள் தனது ஷரஹ்வில் ஸைஃபுல் பஹ்ர் போரைப் பற்றி எழுதுகிறார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் அதன் அமீராக இருந்தார்கள். இப்னு சஅது அவர்கள் கப்த் போர் என்ற தலைப்பில் சுருக்கமாக எழுதியுள்ளார்கள். கப்த் என்பதன் பொருள் மரத்தின் இலைகள் என்பதாகும். பயண உணவு தீர்ந்து விட்ட காரணத்தால் வீரர்களுக்கு இலைகளை சாப்பிட நேர்ந்தது. இப்னு சஅது அவர்கள் இந்த சம்பவம் ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு நடைபெற்றதாக கூறுகின்றார்கள். இது ஹுதைபிய்யா உடன்படிக்கை நடைபெற்ற காலமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொலை நோக்கு பார்வையுடன் பணியாற்றி, முன்னெச்சரிக்கையாக மேற்கூறப்பட்ட பாதுகாப்பு படையை சிரியாவிலிருந்து வரும் குறைஷி வணிக குழுவுடன் பிரச்சனை எதுவும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும் இதன் மூலம் குறைஷிகளுக்கு உடன்படிக்கையை முறிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும் ஸைஃபுல் பஹ்ர் பகுதிக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மக்கா வெற்றி நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் நுழைந்தார்கள். ஹஸ்ரத் ஸுபைர் அவர்களை படையின் ஒரு புறமும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களை படையின் மற்றொரு புறமும் நியமித்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களை காலாட்படை மற்றும் பள்ளதாக்கின் சாய்வான பகுதிக்கு தலைவராக நியமித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பஹ்ரைன் மக்களுடன் ஜிஸ்யா வரி நிபந்தனையை ஒப்புக் கொண்டு சமாதானம் செய்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் ஜிஸ்யா வரி வசூல் செய்து திரும்பி வந்த போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களைப் பார்த்து, ''மகிழ்ச்சி கொள்ளுங்கள்; உங்களுக்கு சிறந்தது கிடைப்பதற்கு நம்பிக்கை கொள்ளுங்கள். **நான் உங்களுடைய ஏழ்மையை கண்டு அஞ்சவில்லை. ஆனால் உங்களுக்கு உலக வசதி ஏற்படுத்தப்பட்டு, அதனால் நீங்கள் அதிகளவு பேராசை கொள்ள ஆரம்பித்து விடுவீர்களோ என அஞ்சுகிறேன். நீங்கள் உலகியலில் மூழ்கி உங்களையே நீங்கள் அழித்து விடக்கூடாதே! என்ற இந்த அச்சம்தான் எனக்கு உள்ளது**'' என்றார்கள்.

**ஆக இந்த எச்சரிக்கையைத்தான் ஒவ்வொருவரும் கண்முன் நிறுத்த வேண்டும். இந்த வகையில் நாம் நமது நிலைமைகளை ஆய்வு செய்து கொண்டேயிருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப செல்வம் வரத்தான் செய்யும். ஆனால் நாம் அந்த செல்வத்தினால் நமது மார்க்கத்தை மறந்து விடக்கூடாது.**

**ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் அந்தஸ்து எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அன்னார் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களது பெயரை கலீஃபாவிற்காக பரிந்துரைத்தார்கள். இவ்வாறு ஹஸ்ரத் உமர் அவர்களும் தமது மரணத்திற்கு முன்னால், ஹஸ்ரத் அபூ உபைதா உயிருடன் இருந்திருந்தால் நான் அவர்களை அடுத்த கலீஃபாவாக நியமனம் செய்திருப்பேன் எனக் கூறினார்கள்.** ஏனென்றால் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சமுதாயத்தின் அமீனாக - நம்பிக்கைக்குரியவாராக இருந்தார்கள் என்றார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கிலாஃபத் பொறுப்பில் அமர்ந்தவுடன் பைத்துல் மால் உடைய பொறுப்பை ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களிடம் ஒப்படைத்தார்கள். ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் சிரியாவை நோக்கி அனுப்பப்பட்ட படைக்கு ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களை அமீராக நியமித்து அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள்தான் முதன் முதலில் சிரியாவின் நகரமான மாப் ஐ வெற்றி கொண்டார்கள். அதன் பின்னர் அன்னார் ஜாபியாவை நோக்கி முன்னேறினார்கள். அங்கு சென்று பார்த்தபோது ரோமானியர்களின் பெரிய படை சண்டையிடுவதற்கு தயாராக இருந்தது. அப்போது ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம் இன்னும் படைகளை அனுப்பும் படி விண்ணப்பம் அனுப்பினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள், அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களுடைய படைக்கு ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்களை அமீராக நியமித்து உதவிக்காக அனுப்பினார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதில், இறைவன் மீது ஆணையாக! நான் இதனை (அதாவது தலைமையை) ஒருபோதும் வேண்டவில்லை; இது எனது விருப்பமாகவும் இருக்கவுமில்லை; உங்களுக்கு இதற்கு முன்பிருந்த அதே அந்தஸ்தே இருக்கும்; நீங்கள் முஸ்லிம்களின் தலைவர் ஆவீர்கள்; உங்களது மேன்மையை நாங்கள் ஒருபோதும் மறுக்க மாட்டோம்; மேலும் உங்களது ஆலோசனையிலிருந்து தவிர்ந்திருக்கவும் மாட்டோம் என்று எழுதியிருந்தார்கள்.

இது தான் நம்பிக்கையாளரின் தன்மை. எவ்வாறு இருபுறமும் பணிவான முறையில் கீழ்படிதலுக்கான வெளிப்பாடு செய்யப்படுகிறது என்பதை பாருங்கள்!

இதன் பிறகு இஸ்லாமிய படை அஜ்னாதைன், ஃபெஹல், டமாஸ்கஸ், லாஸ்க்கியா போன்ற சிரியாவின் பல்வேறு நகரங்களை வெற்றி கொண்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கிலாஃபத் பொறுப்பில் அமர்ந்த போது ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்களை படையினுடைய தலைமைப் பொறுப்பிலிருந்து அகற்றி ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களை படைத் தளபதியாக நியமித்தார்கள்.

எஞ்சியுள்ளவைகளை இன்ஷா அல்லாஹ் பின்னர் எடுத்துரைப்பேன்.

**இன்றைய நாட்களில் பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காக அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களை மவ்லவிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் தீமைகளிலிருந்து பாதுகாப்பானாக. அங்கு மீண்டும் எதிர்ப்பின் கடுமையான அலைகள் எழுந்துள்ளது. சட்டத்தை பாதுகாக்கக்கூடியவர்கள் நீதியினை அறியவில்லை என்பது மட்டுமல்லாது அதனை சீரழித்தும் கொண்டிருக்கின்றனர். நிலையான அரசியல் அவர்களுக்கு இவ்வாறு கிடைத்து விடும் என்பதற்காக மவ்லவிகள் என்ன கூறுகின்றார்களோ அதன் பின்னே செல்கின்றனர். ஆனால் இது அவர்களின் தவறாகும். இதுவே இவர்களின் அழிவுக்கு காரணமாக அமையும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் முன்பும் இந்த கஷ்டங்களை கடந்து வந்துள்ளோம்; தற்போதும் அல்லாஹ்வின் உதவியினால் கடந்து விடுவோம் இன்ஷா அல்லாஹ். ஆனால் இவர்கள் இந்த நடைமுறைகளிலிருந்து தவிர்ந்திருக்கவில்லையென்றால், அவர்களது அழிவு நிச்சயமானதாகும். ஆக, அஹ்மதிகள் இன்றைய நாட்களில் அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் இந்த கஷ்டங்களை அகற்றுவானாக! குறிப்பாக பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகள், பாகிஸ்தானுக்கு வெளியே வசிக்கக்கூடிய அஹ்மதிகள் அல்லாஹ்வுடனான தனது தொடர்பை அதிகப்படுத்துங்கள். இதன் மூலம் அல்லாஹ்வின் உதவியும், ஆதரவும் விரைவில் கிடைக்க வேண்டும். அங்கு வசிக்கும் அஹ்மதிகள் அந்த கஷ்டங்களிலிருந்து விடுதலை பெற வேண்டும்.**

*(தமிழாக்கம்: மவ்லவி N. ஸியாவுல் ஹக்)*